1970 ஆகஸ்ட் 28]

ஆண்டில் ஓய்வுபெற்றவர்களுக்குக் கொடுக்கப்படலாம், எல்லாருக்குமே கொடுக்கப்படலாமா என்பதையெல்லாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி விரைவில் முடிவு எடுக்கப்படும்.

தொடக்க, உயர்தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு சிறப்பு ஊதியம்

* 87 வினா.—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியம், தனியார் சார்பில் அமைந்த தொடக்கப் பள்ளி, உயர்தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றும் தலைமையாசிரியர்களுக்குக் கூடுதல் சிறப்பு ஊதியம் (Special Pay) வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆசிரியர்களின் சம்பளம், படிகள் இவையாவும் குறித்து சம்பள ஆணைக்குழு ஆய்வு செய்யும்.

புலவர் பொ. பொன்னம்பலம் : சம்பள ஆணைக்குழு நிர்ணயித்திருக்கின்ற சம்பள விகிதம் எப்போது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இரண்டு நாட்களுக்கு முன்பே குறிப்பிடப்பட்டது. விரைவில் தரவேண்டுமென்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்ன தேதி என்று கூற முடியாவிட்டாலும் விரைவில் அது பற்றிய முடிவு அறிவிக்கப்படும்.

திரு. டி. மார்டின் : அநேக ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரிகிற ஆசிரியர்கள் சம்பளம் கிடைக்காத நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி அடிக்கடி டைரக்டர் ஆப் ஸ்கூல் எஜுகேஷனுக்குத் தந்தி அனுப்பியும் கவனிக்கப்படவில்லை; குறிப்பாக, திருச்செந்தூர் உடன்குடி ஊராட்சி ஒன்றியத்திற்கு 1970–71-ல் சாங்ஷன் செய்யப்பட்ட ஸ்பெஷல் டி. ஏ. இன்னும் கொடுக்கப்படாத நிலை இருக்கிறது. ஓட்டைப்பிடாரம் பஞ்சாயத்து யூனியனில் சம்பளம் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். உடன்குடி ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்கும் இது போன்று மற்றுமுள்ள பள்ளி ஆசிரியர்களுக்கும் உடனடியாகச் சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென்று டைரக்டர் ஆப் ஸ்கூல் எஜுகேஷனுக்கு தாக்கீது அனுப்ப அரசு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கேள்விக்கு ஊராட்சித் துறை அமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்ல முடியும். கல்வியமைச்சர் எப்படிப் பதில் கூற முடியும்?

திரு. சி. கோவிந்தராஜன் : தொடக்கப்பள்ளி, உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் சிறப்பூதியம் தருவது சம்பந்தமாக தீர்மானம் ஒன்று நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியிருக்கிறார்களா? அது சம்பந்தமாக அரசாங்கம் சம்பளக் கமிஷனுக்கு சிபாரிசு செய்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : துவக்கப் பள்ளி, உயர் துவக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் தனி டியூட்டி அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அது சம்பளக் கமிஷனின் பரிசீலனையில் இருந்து வருகிறது. சம்பளக் கமிஷன் முடிவு எடுத்ததற்குப் பிறகு அதுபற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

THIRU K. VINAYAKAM : Whenever any question relating to pay or allowance or T.A. or D.A. is asked, on the floor of the House, for any category of Government servants, the usual stereo-typed answer is that is has been referred to the pay commission and that Government are awaiting the recommendation by the Pay Commission. May I know what are the terms of reference of that Commission? Have these instances been brought under their purview? If not, will the Government forward these to the Pay Commission so that they may cover these points also?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவர்களுடைய சம்பளம், படி ஆகிய அத்தனையையும் சேர்த்து முறையாக முடிவு எடுப்பதற்குத்தான் பே கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. பல் வேறு துறையினரும் தங்களுடைய கோரிக்கைகளைப் பே கமிஷனிடம் கொடுத்திருக்கிறார்கள். அதேபோன்று பல்வேறு அலுவலகத் தலைமையினரும் (ஹெட்ஸ் ஆப் டிப்பார்ட்மெண்ட்ஸ்) தங்களுடைய துறை ஊழியர்களுடைய சம்பளம், படி ஆகியவற்றை நிர்ணயிப் பதைப் பற்றி எழுதி அனுப்பியிருக்கிறார்கள். பே கமிஷன் அவற்றை எல்லாம் பரிசிலித்து முடிவு எடுப்பார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH : In the district board administration, the headmasters of higher elementary schools where there were more than five teachers were getting duty allowance. But after abolition of district boards, that system has been abolished. Will the Hon. Minister try to revive that system?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று ஏற்கனவே, நான்கு ஆசிரியர்கள், 300 மாணவர்களுக்கு உள்ளாக இருந்தால் இரண்டு ரூபாயும், நான்கு ஆசிரியர்கள், 300 மாணவர்களுக்கு மேல் இருந்தால் ஐந்து ரூபாயும் கொடுக்கும் ஏற்பாடு இருந்தது. அதேபோன்று தனியார் பள்ளி களுக்கும் தரப்பட வேண்டுமென்ற கோரிக்கை வந்தது. அந்தக் கோரிக்கைகளை எல்லாம் சேர்த்து சம்பளக் கமிஷனில் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அத்தகைய உதவி தரப்பட வேண்டுமென் பதை அரசாங்கம் அனுதாபத்தோடு கவனித்து வருகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இதெல்லாம் பே கமிஷன் ரிப்போர்ட் வந்த பிறகு அமல்படுத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஏற்கனவே கோத்தாரி கமிஷன் ரிப்போர்ட் ஒன்று வந்தது. அதை அமல்படுத்த வேண்டுமென்று ஆசிரியர்கள் போராடி ஒன்றும் பெற முடியாதநிலை ஏற்பட்டது. அதே போன்ற நிலைதான் இந்த பே கமிஷன் ரிப்போர்ட் வந்த பிறகும் ஏற்படுமா ?

1970 ஆகஸ்ட் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "ஹைபதடிகல்" கேள்வி கேட்கக் கூடாது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கோத்தாரி கமிஷன் சிபாரிசை மற்றைய மாநிலங்களை விட நாம் அதிகமாக நிறைவேற்றி இருக்கிறோம். உயர்நிலைப் பள்ளி, கல்லூரிகள் நிலையில் முழுவதும் நிறைவேற்றியுள்ளோம். துவக்கப் பள்ளிகளைப் பொருத்தவரை நிறைவேற்ற வேண்டுமென்றால், பெரும் தொகை தேவைப்படுகிறது. இந்திய அரசாங்கம் அதற்கு ஒரு பங்கை ஏற்றுக் கொள்ளவேண்டு மென்று எல்லா மாநிலங்களும் ஏகோபித்த முறையில் கல்வியமைச்சர்கள் மாநாட்டில் வற்புறுத்தியிருக்கிறோம். சம்பளக் கமிஷன் கோத்தாரி கமிஷன் மாதிரி அல்ல. இது நாமாக நியமித்தது. சம்பளக் கமிஷன் செய்கிற முடிவுகளை அரசாங்கம் ஏற்று நடைமுறைப்படுத்தும். அதிலே ஐயப்பாடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தேவையில்லை.

ஹாஜி ம. மு. பீர்முகம்மது : ஊதியக் குழுவினுடைய பரிந்துரை காலதாமதமாகிற காரணத்தால் பிற துறையினருக்கு இடைக் கால ஏற்பாடு செய்திருப்பது போன்று, இந்தத் துறையிலும் இடைக் கால ஏற்பாடாக ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்படிப்பட்ட ஊதிய உயர்வு நாமாகச் செய்கிறபோது கோடிக் கணக்கில் போகிற காரணத்தால், சம்பளக் கமிஷன் முடிவை எதிர்ப்பார்க்கிற நிலைமையில் இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி தலைமை ஆசிரியர்களுக்கு ஸ்பெஷல் பே கொடுப்பது பற்றிய கேள்வி. திரு. டி. மார்டின்......

திரு. டி. மார்டின் : தலைமையாசிரியர்களாக இருந்தாலும், சாதாரண ஆசிரியர்களாக இருந்தாலும், மாதா மாதம் அவர்களுக்குச் சம்பளம் காலதாமதமின்றிக் கொடுக்கப்பட வேண்டும். என்னுடைய தொகுதியில் உடன்குடி ஊராட்சி ஒன்றியத்தில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. அவர்களுக்கு உடனடியாகச் சம்பளம் கொடுப்பதற்கு அரசு உடனடியாக ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாநிலத்தில் இருக்கிற அவ்வளவு துவக்க, உயர் துவக்கப் பள்ளிகளுக்கும் அரசாங்கத்தின் பணம் ஒழுங்காகப் போய்க் கொண்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்கள் இதற்காக ஒதுக்கப்பட்ட தொகையை வேறு வகையில் செலவழித்து விட்டால் இந்த மாதிரி நிலைமை ஏற்படுகிறது. உடன்குடி ஊராட்சி ஒன்றியத்தின் நிலை என்ன என்று தெரியவில்லை. குறைபாடு அரசாங்கத்தில் இருந்தால் உடனடியாக நிவர்த்திக்கலாம். குறைபாடு ஊராட்சி ஒன்றியத்தின் நிலையில் இருந்தால் அங்கே நிவர்த்திக்க வேண்டும். இதுபற்றி உடனடியாகக் கவனித்து ஏற்பாடு செய்யப்படும்.